**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.10/2025**

in

**அசல் வழக்கு எண்.16/2016**

1. வேலுசெட்டியார் (இறப்பு)
2. கணபதி
3. குருநாதபிள்ளை ....மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பாலம்மாள்
2. ராஜலட்சுமி ....1, 2 எதிர்மனுதார்கள்/வாதிகள்
3. அழகுசுந்தரம்
4. தங்கம்
5. கணேசன்
6. பால்வண்ணன் ....3 முதல் 6 எதிர்மனுதார்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள்

இம்மனுவானது 06.01.2026 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனு, 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.28 17:32:23 +0530

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 பிரிவு 151–ன் கீழ், கடந்த 25.11.2025 தேதியில் மனுதாரர்கள் வா.சா.ஆ.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையை முடித்து, வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மாற்றி, மனுதாரர்கள் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யும் வகைக்கு வா.சா.1–ஐ மீண்டும் அழைக்கக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் மீதும் இதர எதிர்மனுதாரர்கள் மீதும் விளம்புகை மற்றும் அதனைத் தொடர்ந்து நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக 27.11.2025 அன்று வாய்தா ஏற்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில், வாதிகள் தரப்பில் முதல் விசாரணை முடிவுற்று, மனுதாரர்கள் வாதிகள் தரப்பு வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு கடந்த 25.11.2025 தேதியில் கடைசியாக வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும், மேற்படி தேதியில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தால், மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையை இந்நீதிமன்றம் முடித்து உத்தரவிட்டது என்றும், ஆனால் மனுதாரர்கள் வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல் கேட்டு (C.A.No.817/2025) இந்நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்ததாகவும், மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்தால் மட்டுமே வா.சா.1–ஐ மனுதாரர்களால் குறுக்கு விசாரணை செய்ய முடியும் என்றும், ஆனால் மேற்படி ஆவணங்கள் மனுதாரர்களுக்கு கடந்த 25.11.2025ம் தேதி மாலை 4.00 மணிக்கு தான் கிடைத்தது என்றும், அதனால் கடந்த 25.11.2025 தேதியில் மனுதாரர்களால் வாதி தரப்பு வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், மேலும் மனுதாரர்கள் வாதிகள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.28 17:32:31 +0530

தரப்பு ஆதரவுகளை இந்நீதிமன்றத்தில் இருந்து நகல் பெற்றுவிட்டபடியால் எப்போதும் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய தயாராக இருந்துவருவதாகவும், ஆகையால், கடந்த 25.11.2025 தேதியில் மனுதாரர்கள் வா.சா.ஆ.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையை முடித்து, வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மாற்றி, மனுதாரர்கள் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யும் வகைக்கு வா.சா.1–ஐ மீண்டும் அழைக்கக் கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>-

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வயது முதிர்வின் காரணமாக உடல் உபாதை நோய் ஏற்பட்டு கஷ்ட ஜீவன வாழ்க்கை செய்து வரும் நிலையில் இந்த வாதிகள் தரப்பில் அசல் வழக்கில் விரைவில் நிவாரணம் பெற விடாமல் தடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் காலம் கடந்து நகல் விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளதாக உண்மைக்கு புறம்பான சங்கதிகள் குறிப்பிட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேலும், அசல் வழக்கில் கடந்த 2016ம் வருடம் முதல் தொடர்ந்து இம்மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜர் செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்திவரும் நிலையில் மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தற்போது அசல் வழக்கில் கண்ட ஆவணங்கள் நகல் வேண்டி மனு செய்துள்ளதாக மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறாகும் என்றும், மேலும், அசல் வழக்கில் கண்ட 1ம் வாதிக்கு தற்போது 80 வயதிற்கு மேல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.28 17:32:37 +0530

ஆகிவிட்டதாலும், அசல் வழக்கில் கண்ட 2ம் வாதிக்கு (வா.சா.1)க்கு தற்போது 50 வயதிற்குமேல் ஆகிவிட்டதால் மூட்டுவலி ஏற்பட்டு நடக்க முடியாத சூழ்நிலையில் மருத்துவம் பார்த்து வருவதால் 2ம் வாதி வா.சா.1 ஐ அலக்களிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமலும், அசல் வழக்கினை காலம் கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு வாதிகளின் கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் கண்ட 1ம் வாதிக்கு தற்போது 80 வயதிற்கு மேல் ஆகிவிட்டதாலும், அசல் வழக்கில் கண்ட 2ம் வாதிக்கு (வா.சா.1)க்கு தற்போது 50 வயதிற்குமேல் ஆகிவிட்டதால் மூட்டுவலி ஏற்பட்டு நடக்க முடியாத சூழ்நிலையில் மருத்துவம் பார்த்து வருவதால் 2ம் வாதி வா.சா.1 ஐ அலக்களிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.28 17:32:45 +0530

வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமலும், அசல் வழக்கினை காலம் கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) அசல் வழக்குகோப்பின் பரிசீலனையில் இருந்து, வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக 12.11.2025 முதல் 25.11.2025 வரை பல வாய்தாக்களில் ஒத்திவைக்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தினால் வா.சா.1ன் குறுக்கு விசாரணையானது 25.11.2025 அன்று இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

9) மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல் கேட்டு (C.A.No.817/2025) இந்நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்ததாகவும், ஆனால் மேற்படி ஆவணங்கள் மனுதாரர்களுக்கு கடந்த 25.11.2025ம் தேதி மாலை 4.00 மணிக்கு தான் கிடைத்தது என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) மனுதாரர்களால் இம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரர்களால் இம்மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

11) இருப்பினும், அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு வா.சா.1–ஐ குறுக்கு விசாரணைக்காக திரும்ப அழைத்து மனுதாரர்கள் குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சரியானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.28 17:32:51 +0530

12) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**13) இறுதியாக**

இம்மனுவானது ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 04.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 04.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.01.28 17:32:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** - இல்லை -

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.01.28 17:33:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.10/2025
in
O.S.No.16/2016
உத்தரவு (Draft / Fair)
நாள் : 28.01.2026